# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.73/2025

### அ.சா. 2 (LW 2)

| பெயர் | திரு. ஜெயந்திலால் | தொழில் | தலைமை காவலர். |
|---|---|---|---|
| த/க பெயர் | சுப்பிரமணி | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | .2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நகர் தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.07.2023 அன்று காலை 06.30மணி அளவில் பணியிலிருந்த போது சிறப்பு சார்பு ஆய்வாளர் கோபால், தலைமை காவலர் 992 ராமச்சந்திரன், முதல்நிலை காவலர் 1887 ராம்பாபு, சார்பு ஆய்வாளர் ரவிசங்கர் ஆகியோருடன் குற்றம் நடைபெறாமல் இருக்க ரோந்து சென்று கொண்டிருந்த போது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டி, மேற்கில் உள்ள சுடுகாட்டில் 5 நபர்கள் உருட்டுக்கட்டை, கத்தியுடன் கொள்ளையடிக்க திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறாகள் என கிடைத்த தகவலின் படி குடைப்பாறைப்பட்டி சுடுகாட்டுக்கு சார்பு ஆய்வாளருடன் செல்லும் போது எங்கள் போலிசார் பாட்டியை பார்த்தவுடன் மேற்கண்ட நபர்கள் தப்பித்து ஓடியவர்களை சுற்றி வளைத்து 2 நபர்களை பிடித்து சார்பு ஆய்வாளர் விசாரித்தார். விசாரித்ததில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பெயர், விலாசம் சொன்னதால் சந்தேகப்பட்டு சார்பு ஆய்வாளர் விசாரித்தார். அப்போது அதில் இருவர் சாகுல் அமீது, தாஜுதின், என பெயர் கூறினார்கள். மீதம் உள்ள 3 நபர்கள் ஓடிவிட்டார்கள். அவர்கள் பற்றி மேற்படி இருவரிடம் விசாரித்த போது ரபீக்ராஜா, சர்தார், முத்துவேல் என கூறினார்கள். சார்பு ஆய்வாளர் விசாரணையில் அவர்கள் மீது பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால் வழக்கை நடத்துவதற்காக கொள்ளை சம்பவத்தில் ஈடுபடுவதற்காக திட்டிம் தீட்டியது தெரிய வந்தது. பின்பு 06.45மணி அளவில் அவர்கள் இருவரிடமும் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து 07.00மணிக்கு தனியாக அழைத்து சாகுல் அமீதிடம் எந்த அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இல்லாமல் அவர் கொடுத்த வாக்குமூலத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் கோபால் , முதல்நிலை காவலர் 1887 ராம்பாபு, சார்பு ஆய்வாளர் ரவிசங்கர் அவர்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர்

மடிக்கணிணியில் தட்டச்சு செய்து எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது. அதன் பின்பு எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரிகளை நிலையம் கொண்டு திரேக பரிசோதனை செய்து நிலைய குற்ற எண். 166/23 இதச பிரிவுகள் 399,402 இதச படி வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எதிரிகளிடமிருந்து எடுத்த சான்று சா.பொ.1. முதல் சா.பொ.3. ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளை கைது செய்வதற்கு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 சார்பு ஆய்வாளருக்கு இரகசிய தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. 1,2 எதிரிகள் மீது திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் இந்த வழக்கிற்கு முன்பே சில வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். 1,2 எதிரிகளை எனக்கு ஏற்கனவே எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை யார்தட்டச்சு செய்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சார்பு ஆய்வாளர் தட்டச்சு செய்தார். அந்த விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை காவல் நிலையத்தில் வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு சார்பு ஆய்வாளர் அத்தாட்சி படிவம் கொண்டு வந்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி தெரியாது. சார்பு ஆய்வாளர்தான் விசாரித்தார். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சான்று பொருட்கள் பொதுவாக கடையில் கிடைக்கக் கூடியது என்றால் சரிதான். சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சுடுகாடு என்பதால் மக்கள் நடமாட்டம் இல்லை. சம்பவ இடத்தில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சான்று பொருட்கள் சார்பு ஆய்வாளர் சான்று பொருள்களை முறையாக பெட்டியில் வைத்து என் முன் சீல் வைத்தாரா என்றால் இல்லை. அ.சா.1. சார்பு ஆய்வளர் ரவிசங்கர், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி இளஞ்செழியன் ஆகியோர் மற்றும் காவலர்கள் இராமச்சந்திரன், கோபால், ராம்பாபு ஆகியோர்கள் சம்பவ தேதியில் என்னுடன் பணிபுரிந்த போலிசார் என்றால் சரிதான். சம்பவ தேதியில், சம்பவ இடத்தில்,சம்பவ நேரத்தில் எதிரிகள் உண்மையில் இல்லை என்றாலும், அ.சா.1. மற்றும் புலன்விசாரணை அதிகாரி என் உயர் அதிகாரிகள் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சார்பு ஆய்வாளர் என்னை போனில் அழைத்தாரா என்றால் நாங்கள் ரோந்தில் இருந்தோம். ராமச்சந்திரன் special teamல் இருந்தோம் என்றால் சரிதான். நானும் special teamல் உள்ள இராமச்சந்திரனும் எங்கு ரோந்து செல்கிறோம் என்பத பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்தோமா என்றால் ரோந்து சென்றோம் என குறிப்பிட்டு சென்றோம். எனக்கு ரோல்கால் உண்டா என்றால் உண்டு. 28.07.2023 நான் ரோல்காலில் இருந்தேனா என்றால் குறிப்பாக ஞாபகம் இல்லை. ரோல்காலை

தினமும் காலை 08.00 மணி என்றால் சரிதான். ரோல்கால் பணிக்கு வந்தவுடன் நான் கையெழுத்து செய்வேனா என்றால் அவ்வாறு கையெழுத்து போடுவதில்லை. இரகசிய தகவல் எனக்கு எதுவும் வரவில்லை. சார்பு ஆய்வாளருக்குத்தான் வந்தது. தகவல் வந்தது பற்றி காலை 06.30 மணி அளவில் சொன்னார். அந்த நேரத்தில் நானும் இராமச்சந்திரனும் முனியப்பன் கோவில் அருகில் ரோந்தில் இருந்தோம். நான் ரோந்தில் இருந்த இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 1 கிமீ தூரம் இருக்கும். நானும் இராமச்சந்திரனும் இருசக்கர வாகனத்தில் சென்றோம், சார்பு ஆய்வாளரும், கோபால், ராம்பாபு ஆகியோர் போலிசார் ஜீப்பில் வந்தார்கள், அந்தஜீப்பின் வாகன எண் பற்றி போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் சென்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சுடுகாடு 1 ஏக்கர்இருக்குமா என்றால் 1/2 இருக்கும், அந்த சமயத்தில் சுடுகாட்டை சுற்றிலும் சுற்றுச் சுவர் இல்லை. 2 பேரை பிடித்ததாக சொல்லும் இடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை வழக்கிற்கு முன்பாகவே தெரியும். தனிநபர் சாட்சிகளை யாரும் சாட்சியாக சொல்லவில்லை என்றாலும் அவர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்காக செல்லும் போது நான் சாதாரண உடையில்தான் சென்றேன். சாதாரண உடையில் ரோந்துக்கு சென்றேன் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் நான் ரோல்காலில் இருந்ததால் அந்த இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் மேல்அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி எதிரிகளிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றாலும், சான்று பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

<u>4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>

<u>மறு விசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.06 21:48:11 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.